## R 5212 (page 104)

# தேவனுடைய சித்தத்தை பகுத்துணர்தல்

## DISCERNING THE WILL OF GOD

“கர்த்தாவே, உமது வழியை எனக்குப்போதியும்.” (சங்கீதம் 27:11)

நாம் தரிசித்து நடப்பதை கர்த்தர் விரும்பவில்லை. இதனால் தேவனுடைய சித்தத்தை பகுத்துணர்வதில் கஷ்டம் இருக்காது. ஆகையால் இந்த வழியில் நமது கீழ்ப்படிதலும் விடாமுயற்சியும் சோதிக்கப்படும்படி செய்கிறார்; ஏனெனில் நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்க வேண்டும். இதை செய்வதற்கு நாம் அனுதினமும் எல்லாவற்றையும் கர்த்தரிடம் ஜெபத்தில் எடுத்துச் செல்ல வேண்டும். எந்த காரியத்தையும் கர்த்தருடைய சித்தத்தை அறிய நாடாமல் எடுக்கக் கூடாது.

நமது அனுதின வாழ்க்கையில் சகல காரியங்களிலும் தேவனுடைய சித்தத்தை அறியக்கூடிய வியக்கத்தக்க நுண்ணறிவு நமக்கு இல்லாததால், அவரது சித்தத்தை எப்பொழுதும் பகுத்துணரக் கூடாதவர்களாக இருக்கிறோம். ஒரு காரியத்தைக் குறித்து வேதவாக்கியங்கள் அறிவுடை கொடுத்தால், வழி தெளிவாக இருக்கும்; கீழ்ப்படிதலுள்ள தேவனுடைய பிள்ளை கடைபிடிக்கக் கூடிய ஒரே மார்க்கமாக அது இருக்கும். ஆனால் காரியம் ஒருவரது சொந்த கருத்தை சார்ந்து இருக்குமானால், பிறகு வழி தெளிவாக இல்லை. நமது கருத்து போதுமானதாக இராது என்பதை உணர்ந்து. அதை முடிவு செய்வது நமது அறிவுக்கு அப்பாற்பட்டு இருப்பதால், நாம் காரியத்தை தேவனிடம் விட்டுவிட மேண்டும்.

நாம் நம்மை கர்த்தரின் பொறுப்பில் ஒப்புக்கொடுத்தால் அவர் நம்மை வழி நடத்துவார் என்பதை நாம் அறிவோம். ஆகையால் நாளின் ஆரம்பத்தில் நாம் இவ்விதமாக சொல்லலாம்; “கர்த்தாவே, அடியேன் இருக்கிறேன். இன்னொரு நாளை நீர் கொடுத்தமைக்காக உமக்கு நன்றி கூறுகிறேன். இந்த நாள் சத்தியத்துக்கும் சகோதரர்களுக்கும் ஊழியம் பண்ண முழுமையான சந்தர்ப்பத்தை கொடுக்கும் என்று நம்புகிறேன். உமக்கு பிரியமான ஊழியம் செய்யும்படி என் சிந்தனைகள், வார்த்தைகள் மற்றும் நடக்கைகளை வழி நடத்தும்.” பிறகு நாம் போய் நமது நல்ல தீர்மானத்தின்படி செய்யலாம்.

கர்த்தர் நம்மை ஒரு திசையில் அல்லது வேறு திசையில் வழி நடத்த விரும்பினால, அது அவருடைய பங்கு, நமக்குரியதல்ல. அவரது வழிநடத்துதலுக்காக ஜெபித்தோம். எப்படியாவது அவரது சித்தத்தை அறிந்து அதன்படி செய்ய நமது கண்கள் விழிப்புடன் இருக்கின்றன. தேவன் தமது மகிமைக்காகவும் நமது நன்மைக்காகவும் சகலத்தை அவர் ரத்து செய்ய முடிந்தவராகவும் விருப்பம் உள்ளவராகவும் இருக்கிறார் என்பதை அறிந்து, இந்த மனோபாவத்தில் சுலபமாக இளைப்பாறலாம்.

சிலர் ஒரு குழந்தையைப் போல, அவர்களது சகல காரியங்களுக்கும் கர்த்தரிடம் செல்லும் ஒரு குறிப்பிட்ட வழியை கொண்டிருந்ததை நமது ஆசிரியர் கவனித்திருக்கிறார். அவர்கள் தங்களது வேதாகமத்தை, நோக்கம் ஏதுமில்லாமல் திறப்பார்கள். அவர்களுடைய கட்டை விரல் அல்லது விரல் எந்த இடத்தில் படுகிறதோ அதுதான் அவர்களுக்கு கர்த்தர் கொடுத்த செய்தி என்று எண்ணுவார்கள். அதை மிகவும் ஜாக்கிரதையாக கடைபிடிப்பார்கள். சில சமயங்களில் அவர்களுக்கு அந்த வசனம்தான் தங்களது ஜெபத்திற்கான குறிப்பிடத்தகுந்த பதிலாக காணப்படும்.

இந்த முறைமை தவறான ஒன்று என்று ஆசிரியர் சொல்ல விரும்பவில்லை. ஆனால் அது அவரது கருத்துக்கு மேல் முறையீடாக இல்லாததால், இந்த காரியத்தை கர்த்தரிடம் எடுத்துச்சென்று அவர் கூறியதாவது: “பிதாவே, இந்த திட்டத்தை பின்பற்ற உண்மையிலேயே பயப்படுகிறேன். இது உங்களை மகிழ்வித்தால், இந்த முறைமை மூலமாக நடத்துவதைக் காட்டிலும் எனது கருத்து மூலமாக வழி நடத்தும். ஏனெனில் எனது சிந்தை அதை ஏற்றுக்கொள்ள தகுதியுள்ளதாக காணப்படவில்லை.” கர்த்தர் அவரது வார்த்தையை எடுத்துகொண்டதாக காணப்படுகிறது.

ஒவ்வொரு காரியத்திலும், ஏன் சரி என்பது சரி, என்பதற்கான ஒரு காரணம் நிச்சயமாக இருக்கிறது. அதை அறிந்துகொள்ள நாம் விரும்ப வேண்டும். தேவன் ஒரு காரியத்தில் அந்த வழியைக் காட்டிலும் இந்த வழியை ஏன் விரும்புகிறார் என்பதை அறிந்து கொள்ள விரும்ப வேண்டும். நாம் அவரது ஞானத்தை சந்தேகப்படுகிறோம் என்பதல்ல. ஆனால் தெய்வீக ஏற்பாட்டின் ஆவிக்குள்ளாக நாம் நுழையலாம். நாம் ஆலோசிக்கிற சிஷயம் குறித்த எல்லா வேத வாக்கியங்களையும் ஆராய்ந்து தேவனுடைய தொடர்புகள் மற்றும் போதனைகளின் அடிப்படை கொள்கையை காண முயற்சிப்பதே தேவனுடைய வழிகாட்டுதலை நாடுகிற ஆசிரியரின் முறையாக இருக்கிறாது.

மற்றதைக் காட்டிலும் இந்த முறைமையினால் அவர் இன்னும் அதிக சந்தோஷத்தை பெறுகிறார். மற்ற முறையை பின்பற்றுவதின் மூலம், வேதாகமத்தை அவருக்காக திறப்பது தேவனா, அல்லது சாத்தானா அல்லது தற்செயலாகவா என்பதை அவரால் அறிய முடியவில்லை. தேவனுடைய வசனத்தின் போதனையாக அவர் நம்புகிறதை பின்பற்றுவது அதிக பிரியமாக அவருக்கு இருக்கிறது. அதாவது காரணம் மற்றும் தீர்மானத்தில் பிதாவானவரின் வழி நடத்துதலைக் கேட்டு எல்லாவற்றையும் ஜெபத்தில் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்து அதன்பிறகு போய் தன்னால் முடிந்தவரை அந்த காரணத்தையும் தீர்மானத்தையும் பின்பற்றுவது ஆகும்.
R5212 : page 105
தேவன் அவரது கருத்தை ஒரு வழியில் பயன்படுத்த அனுமதித்து, பிற்பாடு அது சிறப்பானதாக காணப்படாதிருந்தாலும் தேவன் அதை சில மாபெரும் ஆசீர்வாதத்தை அல்லது பிரயோஜனமான பாடத்தை கொண்டு வருவதற்காக பயன்படுத்துகிறார். பிதாவின் வசனத்தையும், அவரது தெய்வீக வழி நடத்துதலையும் அவர் புரிந்து கொள்ளுவதைத்தான் நிச்சயமாக, கருத்தின் மூலம் அர்த்தப்படுத்துகிறார். இப்படியாக செய்து, சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்பதை அவர் அறிவார். (ரோமர் 8:28)

---